# பொதுமக்களுக்கான அறிவித்தல்

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 2020.09.30 இல் உள்ளவாறு பொதுமக்களிடமிருந்து வைப்புக்களைத் திரட்டிக் கொள்வதற்கு அதிகாரமளிக்கப்பட்டுள்ள உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள்

- ஒட்டுமொத்த நிதியியல் துறையின் பாதுகாப்பினையும் ஆற்றல்வாய்ந்த தன்மையினையும் மேம்படுத்தும் பொருட்டு, 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் ஏற்பாடுகளின் நியதிகளின்படியும் அதன் கீழ் விடுக்கப்பட்ட பணிப்புரைகளுக்கிணங்கவும் மத்திய வங்கி உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளை ஒழுங்குமுறைப்படுத்தி மேற்பார்வை செய்கிறது. இருப்பினும் மத்திய வங்கியின் ஒழுங்குமுறை மற்றும் மேற்பார்வை உரிமம்பெற்ற நிதி நிறுவனங்கள் உள்ளடங்க எந்தவொரு நிதி நிறுவனத்தின் வீழ்ச்சியையும் தடுக்காது.
- இலங்கை மத்திய வங்கி, முன்மதியுடைய தேவைப்பாடுகளுடன் இணங்கியொழுகாத ஏதேனும் சந்தர்ப்பமொன்றில் ஒழுங்குமுறைப்படுத்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அதிகாரத்தினைக் கொண்டிருக்கிறதெனினும், இலங்கை மத்திய வங்கியின் ஒழுங்குமுறைப்படுத்தல் மற்றும் மேற்பார்வை தேவைப்பாடுகளுக்கிணங்கி நிறுவனங்களைப் பாதுகாப்பான மற்றும் சிறந்த முறையில் செயற்படுத்துவதற்கான இறுதிப் பொறுப்பை உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் நிர்வாகம் கொண்டுள்ளது.
- இலங்கை மத்திய வங்கி உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளின் வைப்புக்களுக்கு உத்தரவாதமளிக்கும் சட்டபூர்வமான அதிகாரத்தினைக் கொண்டிருக்கவில்லை. ஆயினும் இலங்கை மத்திய வங்கியினால் நிறுவப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் கீழ் அனைத்து உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகளும் தமது வைப்புப் பொறுப்புக்களைக் காப்புறுதி செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன. ஏதேனும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் உரிமம் இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பமொன்றில், தற்பொழுது காப்புறுதி செய்யப்பட்டுள்ள வைப்பாளர்களுக்காக, வைப்பாளரொருவருக்கு, நிறுவனமொன்றிற்கு உயர்ந்தபட்சம் ரூ.600,000 இழப்பீடாக வழங்கப்படும். ஏதேனும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனியின் உரிமம் இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பமொன்றில் இலங்கை வைப்புக்கள் காப்புறுதி மற்றும் திரவத்தன்மை ஆதரவுத் திட்டத்தின் கீழ் "வைப்புக்கள்" தவிர்ந்த வேறு எந்தவொரு சாதனமும் உள்ளடக்கப்படமாட்டாது என்பது பற்றி பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகிறது.
- பொதுமக்கள் தகவலுள்ள தீர்மானங்களை எடுப்பதை உதவுவதற்காக, உரிமம்பெற்ற நிதி நிறுவனங்கள் முக்கிய நிதித் தகவல்கள்/ குறிகாட்டிகள் ஆகியவற்றை ஒவ்வொரு ஆறு மாதத்திற்கொருமுறை வெளியிடுமாறு நிதித்தொழில் சட்டத்தின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.
- வைப்புக்கள் உட்பட எந்தவொரு முதலீட்டின் இடர்நேர்வுக்கும் வருவாய்க்குமிடையில் நேர்மறையான தொடர்புள்ளது என்பதைப் பொதுமக்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.
- மேற்கூறப்பட்டவையைக் கருத்திற்கொண்டு பொதுமக்கள் தமது நிதிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதில் மிகுந்த கவனத்தினைச் செலுத்துமாறும் அதேபோன்று அதிகாரமளிக்கப்படாத நிறுவனங்களில் நிதிகளை வைப்புச் செய்வதிலிருந்து விலகியிருக்குமாறும் அவர்களுக்கு ஆலோசனை வழங்கப்படுகிறது.

## உரிமம்பெற்ற நிதியியல் நிறுவனங்கள்

### (ஆங்கில நெடுங்கணக்கு ஒழுங்கில்)

1. அபான்ஸ் பினான்ஸ் பிஎல்சி
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. ஏஎம்டபிள்யு கபிட்டல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி*
5. ஏசியா அசெற் பினான்ஸ் பிஎல்சி
6. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி*
7. பிம்புத் பினான்ஸ் பிஎல்சி*
8. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
9. சிற்றிசென்ஸ் டெவலெப்மென்ற் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
10. கொமர்ஷல் கிறடிட் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
11. கொமர்ஷல் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
12. டயலொக் பினான்ஸ் பிஎல்சி
13. பின்ரெக்ஸ் பினான்ஸ் லிமிடெட்
14. எச்என்பீ பினான்ஸ் பிஎல்சி
15. ஐடியல் பினான்ஸ் லிமிடெட்
16. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்*
17. லங்கா கிறெடிட் அன்ட் பிசினஸ் பினான்ஸ் லிமிடெட்
18. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
19. எல்ஓஎல்சி டெவலப்மென்ட் பினான்ஸ் பிஎல்சி
20. எல்ஓஎல்சி பினான்ஸ் பிஎல்சி
21. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
22. மேர்ச்சன்ட் பாங்க் ஒவ் சிறிலங்கா அன்ட் பினான்ஸ் பிஎல்சி*
23. மல்ரி பினான்ஸ் பிஎல்சி
24. நேஷன் லங்கா பினான்ஸ் பிஎல்சி**
25. ஒறியன்ட் பினான்ஸ் பிஎல்சி
26. பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் பினான்ஸ் பிஎல்சி
27. பீப்பிள்ஸ் மேர்ச்சன்ட் பினான்ஸ் பிஎல்சி
28. பிறைம் பினான்ஸ் பிஎல்சி
29. றிச்சேர்ட் பீரிஸ் பினான்ஸ் லிமிடெட்*
30. சர்வோதய டெவலப்மன்ட் பினான்ஸ் லிமிடெட்
31. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி
32. செரன்டிப் பினான்ஸ் லிமிடெட்
33. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
34. சியப்பதா பினான்ஸ் பிஎல்சி
35. சொவ்ற்லொஜிக் பினான்ஸ் பிஎல்சி*
36. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் பிஎல்சி
37. யு பீ பினான்ஸ் கம்பனி லிமிடெட்*
38. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி

* குறைந்தபட்ச மூலதனப் போதுமை தேவைப்பாடுகளுக்கு இணங்காதது மற்றும் அந்நிறுவனத்திற்கு அத்தேவைப்பாடுகளை இணங்கச் செய்வதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

** குறைந்தபட்ச மூலதனப் போதுமைத் தேவைப்பாடுகளுக்கு இணங்காதது மற்றும் அந்நிறுவனங்கள் அத்தேவைப்பாடுகளுடன் இணங்குவதற்கு மூலதனத் திட்டம் ஒன்றை நிறுவனம் சமர்ப்பிக்க வேண்டும்.

\# சிங்கப்புத்ர பினான்ஸ் பிஎல்சியிற்கு 2011ஆம் ஆண்டின் 42ஆம் இலக்க நிதித்தொழில் சட்டத்தின் கீழ் நிதித்தொழிலைக் கொண்டு நடாத்துவதற்கு வழங்கப்பட்ட உரிமத்தினை இரத்துச் செய்யும் அறிவித்தல் இலங்கை மத்திய வங்கியின் நாணயச் சபையினால் வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும், சட்ட ஏற்பாடுகளுக்கமைய சமர்ப்பிக்கப்பட்ட உத்தேச மூலதனத்தைப் பெருக்குகின்ற திட்டத்தினைக் குறிப்பிடப்பட்ட காலவரையறையினுள் அமுல்ப்படுத்துவதற்கான வாய்ப்பொன்றினை வழங்குவதற்கு நாணயச் சபை முடிவெடுத்துள்ளது.

குறிப்பு : மேற்குறிப்பிடப்பட்ட குறைந்த மூலதனப் போதுமைத் தேவைப்பாடுகளுடன் இணங்காத உரிமம்பெற்ற நிதி நிறுவனங்கள் வைப்பீட்டாளர்களுக்குப் பாரிய இடர்நேர்வினை ஏற்படுத்தும்.

**பணிப்பாளர் - வங்கியல்லா நிதியியல் நிறுவனங்களின் மேற்பார்வைத் திணைக்களம்**

இலங்கை மத்திய வங்கி, இல. 30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01

0112477504 0112477738 dsnbfi@cbsl.lk